# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS. 36/2016 . நாள்.14.02.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாண்டுரங்கன் | **வயது** | 47 |
| **த/பெ. க/பெ.** | ராமமூர்த்தி | **மதம்** | |
| **முகவரி** | ஜீம்மாண்டியூர் | **தொழில்** | கூட்டுறவு சங்கத்தின் உதவியாளர் |

**<u>வா.சா.1 ஆஜர். முதல் விசாரணை தொடர்ச்சி :</u>**

நான் இவ்வழக்கில் வாதிகள் மைனர் என்பதால் அவர்களது தந்தை என்ற நிலையில் 1,2 வாதிகளுக்காக சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 09.10.2023 தேதிய ஆ பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 09.04.2008 தேதிய பசலி எண்.1417க்கான அடங்கல் கணக்கு உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பட்டா எண்.565க்கான டிமாண்ட் நோட்டில் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 20.02.1990 தேதிய 1399 பசலிக்கான கந்தாய ரசீது அசல் பட்டா எண்.565 க்கு செலுத்தப்பட்டது. வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 14.02.1992 தேதிய பசலி 1401க்கான கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 13.03.1993 தேதிய பசலி 1402க்கான கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு

**செய்யப்படுகிறது.**

7. 14.02.1994 **தேதிய பசலி** 1403 **க்கான கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.**11 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 02.02.1995 **தேதிய பசலி** 1404 **க்கான கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.**12 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. 18.03.2009 **தேதிய பசல்** 1418 **க்கான கந்தாய ரசீது அசல் வா.சா.ஆ.**13 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. 07.09.1989 **தேதிய ஆவண எண்.**14/1989 **உயில் ஆவணம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.**14 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. 16.09.1989 **தேதிய ஆவண எண்.**860/1989 **தான செட்டில்மண்ட் பத்திரத்தின்** சார்பதிவக **நகல் வா.சா.ஆ.**15 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்களை மேற்படி ஆவணங்கள் உரிய அலுவலரிடம் முறையாக பெறப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் மேற்படி ஆவணங்களை 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணையின் பேரில் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வா.சா.ஆ.14 ஆவணமான உயில் சாசனத்தின் அசல் தாக்கல் செய்யப்படாத காரணத்தாலும், சாட்சிகள் மூலமாக குறியீடு செய்ய வேண்டியும், உயில் சாசனத்தை எழுதியவரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்படாத காரணத்தாலும் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. ஆட்சேபணையின் பேரில் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. ஒரு ஆவணத்தை குறியீடு செய்வதும், அதை நிருபிப்பதும் இரு வேறு சங்கதிகள் என்பதால் மேற்படி ஆவணங்களை நீதிமன்றம் குறியீடு செய்துள்ளது.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஒம்/- எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்